வேண்டியிருக்கிறது. அதற்கு வேண்டிய தண்ணீரையும் நாம் ரிசர்வ் செய்துகொள்ள வேண்டியிருக்கிறது. 20 ஆயிரம் ஏக்கர்களுக்கு தண்ணீர் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். மணிமுத்தாறினுடைய கொள்ளளவு தற்போது மிகவும் குறைவாக இருக்கிறது. 49.15 அடி ஆழம் மட்டுமே இருக்கிறது. அதனுடைய 5,518 மில்லியன் கன அடி கொள்ளளவுக்கு இப்போது 480 மில்லியன் கன அடி மட்டுமே இருக்கிறது. இதிலே உபயோகப்படுத்தக்கூடிய நீர் 480 மில்லியன் கன அடி மட்டுமே. ஆகவே, இருக்கின்ற சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு நம்முடைய அனல் மின் நிலையத்திற்கு வேண்டிய தண்ணீரையும் ரிசர்வ் செய்து வைத்துக்கொண்டுதான் நாம் தண்ணீர் விடமுடியும். ஆகவே, இதுசம்பந்தமாத அதிகாரிகளோடு கலந்து பேசியதில் இப்போது சாத்தியக்கூறுகள் இல்லாமல் இருக்கிறது. ஆகவே, அவருடைய கோரிக்கை மறுபடியும் பரிசீலிக்கப்படும். இருக்கின்ற சூழ்நிலை, தண்ணீருடைய கொள்ளளவு பொறுத்து இந்த அரசு உரிய நடவடிக்கை எடுக்கும். ஏற்கெனவே ஒரு உத்தரவை பொதுப்பணித்துறை மூலம் நாங்கள் வழங்கி யிருக்கிறோம். 50 அடிக்குக் கீழே தண்ணீர் எடுக்க வேண்டுமென்றால், அதிகாரிகள் அந்தந்தச் சூழ்நிலைகளுக்கேற்ப எடுத்துக்கொள்ளலாம் என்று பொதுப் பணித் துறை சார்பிலே ஒரு அரசாணை 5-1-1996 அன்றே நாங்கள் வழங்கியிருக்கிறோம். ஆகவே, அரசின் சார்பிலே எந்தவிதமான குழப்பமும் இல்லை. ஏற்கெனவே தெளிவாக அதிகாரிகளுக்கு அந்த அரசாணை வழங்கப்பட்டுவிட்டது. தலத்தினுடைய நிலைமைகளுக்கு ஏற்ப அங்கு இருக்கின்ற விவசாயிகளுடைய பிரச்சினைகளையும், குடிநீர் பிரச்சினைகளையும் அனல் மின் நிலையத்திற்குத் தேவையான தண்ணீரையும் கணக்கில் எடுத்துக்கொண்டு 50 அடிக்குக் கீழே எடுக்க வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளலாம் என்று ஆணை வழங்கி யிருக்கிறோம். ஆகவே, அரசு இதிலே தெளிவான முடிவை எடுத்திருக்கிறது. ஆகவே, தலத்திலே இருக்கின்ற நிலைமைகளுக்குத் தக்கவாறு அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்கள் என்பதை மாத்திரம் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) பொள்ளாச்சி பகுதியில் தென்னைக்குத் தண்ணீர் தேவை குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, பொள்ளாச்சி பகுதியினுடைய தென்னைக்குத் தண்ணீர் தேவை என்று ஒரு முக்கியமான பிரச்சினையைப் பேரவையில் எழுப்ப வேண்டுமென்று திரு. வி.பி. சந்திரசேகர் அவர்கள் என்னிடத்தில் அனுமதி கோரியிருக்கிறார். அவருக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. திரு. வி.பி. சந்திரசேகர்.

முற்பகல் 11.25

*திரு. வி.பி. சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறையினுடைய அன்றாட அசைவுகளை எல்லாம் விரல் நுனியிலே வைத்திருக்கின்ற பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், இந்தப் பிரச்சினைக்கு இன்றே தீர்வு காண்பார் என்று நான் நம்புகிறேன். இன்றைக்கு கோவை மாவட்டம் பொள்ளாச்சிப் பகுதி கடுமையான வறட்சியின் பிடியிலே சிக்கித் தவித்துக் கொண்டிருக்கிறது. கிட்டத்தட்ட 15 ஆயிரம் ஏக்கரிலே, 12 லட்சம் தென்னை மரங்கள் அங்கே இருந்து கொண்டிருக்கின்றன. இன்றைக்கு அந்தப் பகுதியை நான்கு மண்டலங்களாகப் பிரித்த காரணத்தாலே முதல் மண்டலத்திற்குக் கிடைக்க வேண்டிய தண்ணீர் சற்று காலதாமதமாக செல்கின்ற காரணத்தாலே அங்கே இருக்கின்ற தென்னை மரங்கள் எல்லாம் கடுமையான வறட்சியின் பிடியிலே இருக்கின்றன. இன்றைக்கு அவை அங்கே காய்ந்து கொண்டிருக்கின்ற நிலையை நாம் பார்க்கின்றோம். பொதுவாகவே ஒவ்வொரு பயிரினுடைய நாற்றுக்களை எல்லாம் நாற்றுகள் என்று சொல்வார்கள். ஆனால், தென்னை மரத்தைப் பொறுத்தமட்டிலே அதனுடைய நாற்றை பிள்ளை என்று சொல்வார்கள். ஏன் என்று கேட்டால் தாங்கள் வளர்த்து உருவாக்கியிருக்கின்ற பிள்ளைக்குச் சமமாக தென்னையினுடைய நாற்றுகளைச் சொல்கின்ற காரணத்தாலே அதை பிள்ளை என்று சொல்வார்கள். அப்படி வளர்த்த மரங்கள்-40 வருடம், 50 வருடம், 60 வருடம் ஆன தென்னை மரங்கள் எல்லாம் இன்றைக்கு கடுமையான வறட்சியால் காய்ந்து கொண்டிருக்கின்றன. அங்கே இருக்கின்ற விவசாயிகள் வாடிக்கொண்டிருக்கிறார்கள். இந்தத் தென்னை மரங்கள் மட்டுமல்லாமல் அந்தப் பகுதியிலே குடிநீர்ப் பஞ்சம் கடுமையான நிலையை எட்டியிருக்கிறது. இன்றைக்கு அந்தப் பகுதிக்கு நீங்கள் உயிர்த் தண்ணீர் கொடுப்பீர்களேயானால் அந்தத் தென்னை மரங்கள் மட்டுமல்லாமல் அங்கே இருக்கின்ற பொதுமக்களுக்கும் குடிதண்ணீர் கிடைக்கின்ற அளவிற்கு நீர் ஆதாரம் கிடைக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு அந்த முதல் மண்டலத்திலே செங்குட்டுப்பாளையம் பிரதான வாய்க்கால், செல்லப்பன்பாளையம் வாய்க்கால், சாலையூர், கோலாருப்பட்டி வாய்க்கால் போன்றவை அந்தப் பகுதியிலே இருக்கின்றன. அங்கு விவசாயிகள் தண்ணீருக்காக ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் குறைந்தது இந்த ஒரு வாய்க்கால் பகுதிக்கு மூன்று நாட்களாவது தண்ணீர் கொடுத்து அங்கே இருக்கின்ற விவசாயிகளுடைய ரத்தக் கண்ணீரைப் போக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு வாடிய பயிர்களைக் கண்ட

போதெல்லாம் வாடினார் வள்ளலார் என்று பேசிய போதெல்லாம் நான் கேட்டு இருக்கின்றேன். இன்றைய தினம் நமது மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களை வள்ளலார் உருவிலே நான் காண்கிறேன். எங்களுக்குத் தண்ணீர் கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக நேற்றைக்கு இந்த அவையிலே சில விவரங்களை நான் தெரிவித்து இருக்கிறேன். இப்போது நான்காவது மண்டலத்திற்கு தண்ணீர் விட்டுக்கொண்டிருக்கிறோம். அதற்குத் தேவையான 9 டி.எம்.சி. தண்ணீர் விட வேண்டும், 5 டி.எம்.சி. தான் இருக்கிறது. ஏற்கெனவே இதற்கிடையிலேகூட அவர்கள் கோரிக்கையில் கேட்ட ஐந்து நாட்கள் எக்ஸ்-ஆக, அதிகமாக தண்ணீர் விட்டோம். அதிலே ½ டி.எம்.சி. தண்ணீர் ஏற்கெனவே அளவுக்கு அதிகமாகவே விட்டிருக்கிறோம். இப்போது குடிதண்ணீருக்காகவும் தென்னை மரங்களுக்கும் கேட்கிறார்கள். வருடா வருடம் குடிதண்ணீருக்காகவும் தென்னை மரங்களுக்காகவும் தண்ணீர் விடுவது வழக்கம்தான். தண்ணீர் அதிகமாக இருக்கின்ற காலங்களிலே நாம் அப்படி விட்டிருக்கிறோம். இப்போது நிலைமை நான்காவது மண்டலத்திலே சிக்கலாக இருக்கிறது. இருந்தாலும் குடிதண்ணீர் என்று வருகின்றபோது இந்த அரசு கனிவோடு பரிசீலிக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, இந்த நான்காவது மண்டலத்திலே விவசாயிகளுக்கு பாதிப்பு இல்லாமல், இங்கே இருக்கின்ற விவசாயிகளுக்கும் ஓரளவிற்கு பலன் அளிக்கக்கூடிய விதத்திலே தென்னை மரங்களைக் காப்பாற்றுவதற்கும், குடிதண்ணீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஆன நடைமுறைகளை ஆய்வு செய்து ஒரு புரப்போசல் கொடுக்க வேண்டும் என்று அங்கே இருக்கின்ற தலைமைப் பொறியாளருக்கும், கண்காணிப்புப் பொறியாளருக்கும் ஏற்கெனவே உத்தரவிடப்பட்டிருக்கிறது. அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. இது சம்பந்தப்பட்ட நான்கு மண்டல விவசாயிகளுக்கும் பிரச்சினை இல்லாமல், எந்த விவசாயிகளுக்கும் பிரச்சினை இல்லாமல் ஒரு சுமூகமான முடிவை அரசு எடுக்க வேண்டியிருக்கிற காரணத்தாலே விரைவில் இது சம்பந்தமான முடிவினை இந்த அரசு எடுக்கும். இரண்டு பேருக்கும் பாதிப்பு இல்லாமல் பார்த்துக் கொள்ளும் என்பதை மாத்திரம் சொல்லி இந்த அரசு சரியான நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.